**15.7.2007**

## காமராஜர் பிறந்த நாள் – கல்வி வளர்ச்சி நாள்

## சத்துணவுடன் வாரம் மூன்று முறை முட்டைகள் வழங்கும் திட்டம் தொடக்க விழா

சமூகநலத்துறை - செய்தி வெளியீடு

தமிழகத்தில் உள்ள வருங்கால சந்ததியினரின் ஆற்றலை வளர்க்கும் நோக்குடன் கலைஞர் தலைமையிலான அரசு, குழந்தைகள் நலனிலும், அவர்தம் வளர்ச்சியிலும் அதிக அக்கறை செலுத்தி வருகிறது. குழந்தைகள் மையங்கள் மற்றும் பள்ளி சத்துணவு மையங்களில் உள்ள 2 வயது முதல் 15 வயது வரையுள்ள சிறார்கள், மாணவ மாணவியர்களுக்கு 3.6.89 முதல் இரு வாரங்களுக்கு ஒரு முட்டை வழங்கும் புதியதொரு திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அப்போது தொடங்கி வைத்தார்கள். பின்னர் 1998ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் சத்துணவுப் பயனாளிகளுக்கு வாரம் ஒரு முட்டை வழங்கும் திட்டமாக கலைஞர் தலைமையிலான அரசுதான் அதை மேம்படுத்தி மாற்றியமைத்தது.

2. 2006ம் ஆண்டின் தேர்தல் அறிக்கையில் சத்துணவுடன் வாரம் இரு முட்டைகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பை நிறைவேற்றும் பொருட்டு இந்திய மக்களாட்சி வரலாற்றிலேயே ஒரு முன்னுதாரணமாக பதவியேற்றவுடன் அதே அரங்கில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாரம் இருமுறை முட்டை வழங்கப்படும் என அதற்கான கோப்பில் கையொப்பமிட்டு அதற்கான ஆணையையும் வெளியிட்டார்கள். பெருந்தலைவர் காமராஜர் பிறந்த ஜூலைத் திங்கள் 15ஆம் நாள் கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படும் என

இந்த அரசு அறிவித்தது. மாணவ மாணவியர்கள் புத்தாடை அணிந்து வந்து, பள்ளிகளில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, உரிய மரியாதை செலுத்தி, கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாட வேண்டும் என அரசு ஆணை வெளியிட்டது.

3. தற்போது 2007-2008ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் சத்துணவுடன் வாரம் மூன்று முட்டைகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் காமராஜர் பிறந்த நாளான 15.07.2007 முதல் வாரம் மூன்று முறை முட்டை வழங்கப்படும் என ஆணையிடப்பட்டுள்ளது. இதன்படி வாரம் மூன்று முட்டைகள் சத்துணவுடன் சேர்த்து திங்கள், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் வழங்கப்படும். இதனால் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் செயல்படும் 87,642 சத்துணவு மற்றும் குழந்தைகள் மையங்களின் மூலம் 2 வயது முதல் 15 வயது வரையுள்ள 71 இலட்சம் குழந்தைகள் மற்றும் மாணவ மாணவிகள் பயன் பெறுவர்.

4. மேலும் தமிழகத்தில் உள்ள 1 வயது முதல் 2 வயது வரையுள்ள சிறார்களுக்கும் வாரம் ஒரு முட்டை வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். ஒவ்வொரு வாரத்திலும் புதன்கிழமையன்று இவர்களுக்கு சத்துணவுடன் சேர்த்து முட்டை வழங்கப்படும். இந்த புதிய திட்டத்தின் மூலம் 2,40,017 சிறார்கள் 15.07.2007 முதல் பயனடைய உள்ளார்கள். மேற்கண்ட இரு திட்டங்களின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.224 கோடி செலவாகும்.

5. இந்திய உச்சநீதி மன்றமே குழந்தைகளுக்கு 300 கலோரி சக்தியும் 8-12 கிராம் புரதச்சத்து மிகுந்த உணவும் குறைந்த பட்சம் 200 நாட்களுக்கு வழங்க வேண்டும் என்றுதான் ஆலோசனை வழங்கியுள்ளது. ஆனால் இந்தியாவில் தமிழகத்தில் மட்டும்தான் ஒவ்வொரு பயனாளிக்கும் சத்துணவின் மூலம் தினந்தோறும் 435 கலோரி சக்தியும் 10.6 கிராம் புரதச் சத்து கிடைக்கும் அளவிற்கு 2 வயது முதல் 10 வயது வரையுள்ள சிறார்கள் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு வருடத்தில் 365 நாட்களுக்கும் 11 வயது முதல் 15 வயது வரையுள்ள மாணவ, மாணவிகளுக்கு 220 நாட்களுக்கும் சத்துணவு வழங்கப்படுகிறது. இதுமட்டுமின்றி சத்துணவுடன் சேர்த்து புரதச்சத்து மிகுந்த முட்டைகள் வாரம் மூன்றுமுறை வழங்கப்படுவதால் குழந்தைகள் மற்றும் மாணவ மாணவியர்களுக்கு 238.8 கலோரி சக்தியும் 18.36 கிராம் புரதச் சத்தும் ஒவ்வொரு வாரமும் கூடுதலாக கிடைக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

----------